# *Waqf* Governance in Sri Lanka: Legal Framework, Issues, Challenges, Way forward

[1]Iqbal Saujan, [2]S.M.M. Mazahir

[1,2]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
[1]saujaniqbal95@gmail.com, [2]mazahirsmm@seu.ac.lk

***Abstract*** *Waqf (Endowment) is the permanent dedication by any person to any movable or immovable property for any purpose recognized by the Shari'ah as pious, religious or charitable. This is one of the Islamic institutions that has existed since the time of Prophet Muhammad (SAW). The Sri Lanka waqf's management operations are as early as the 1956s institutionalization exercise. Due to the improper management of waqf assets, society has faced poverty, unemployment, and cessation of social voluntary movements. Therefore, this study aims at identifying the challenges faced by waqf institutions in the proper implementation of the Sri Lankan waqf law. The study used a qualitative study and review of documents in the waqf Act and waqf institutions. According to the results, there is no authority to the waqf Tribunal to amend a verdict, The Waqf Tribunal depends on the District Court in implementing the judgments, deficiencies in the selection of trustees or muthawalis, and lack of proper maintenance of the written waqf documents called "Wakfnamar". This study concludes with the argument that the Sri Lankan Waqf institutional process has legal, managerial, and practical shortcomings. There is no doubt that this Islamic doctrine will help Sri Lanka prosper economically if these shortcomings are minimized. The researchers expect that the findings of this study will be significant for future researchers and policy-makers.*

**Keywords:** *Waqf Governance, Legal Framework, Islamic Endowment, Sri Lanka, Sri Lankan waqf Act*

## 1. அறிமுகம் (Introduction)

இலங்கை சட்டமுறைமையானது ஆங்கிலச் சட்டம், ரோமன் டச்சுச் சட்டம் மற்றும் வழக்காற்றுச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டது (Cooray, 2003). நாட்டின் மத, கலாசார, பிரதேச அடிப்படைகளில் வாழ்கின்ற தனித்துவமான குழுமங்களின் தனித்துவங்களைப் பேணும் வகையில், அவர்கள் பின்பற்றுகின்ற, அவர்களுக்கே உரித்தான சட்டங்கள், நடைமுறைகள், வழக்காறுகள் முதலானவற்றை முதன்மைப்படுத்தும் தனியார் சட்டங்களும் இலங்கை சட்டத்தின் ஒரு பகுதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன (Abdullahi A. An-Na'im, 2020). இப்பல்வகைச் சட்ட முறைக்கு காரணம் இலங்கை நீண்ட காலமாக வெளிநாட்டவர்களின் ஆளுகைக்குட்பட்டு வந்துள்ளமையாகும். இலங்கையில் பின்பற்றப்படும் தனியார் சட்டங்களாக கண்டிய சிங்களவர் சட்டம், தேசவழமைச் சட்டம், முகவர் சட்டம் மற்றும் முஸ்லிம் தனியார் சட்டம் போன்றன காணப்படுகின்றன (Cooray, 2003). வழக்காற்று அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த முஸ்லிம் தனியார் சட்டத்தின் பிரயோகத்தை இலகுபடுத்துவதற்காக டச்சு ஆட்சியாளர்களால் வாரிசுரிமை,


ISBN 978-624-5736-14-0

திருமண மற்றும் விவாகரத்து போன்ற சட்டங்களை உள்ளடக்கி முஸ்லிம் குடும்பவியல் சட்டம் தொகுக்கப்பட்டது (Abduroaf, Muneer, et.al, 2016). டச்சுக்காரர்களைத் தொடர்ந்து காலனித்துவ ஆட்சியைக் கைப்பற்றிய (1799) ஆங்கிலேயர்களால் குறித்த சட்டத்தொகுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது (Fathima,2003). சில காலங்களின் பின் நடைமுறையில் இருந்த Anglo-Dutch Code இற்குப் பதிலாக முஸ்லிம் திருமணப்பதிவுக் கட்டளைச் சட்டம், 1896ஆம் ஆண்டு பிரித்தானியர்களால் கொண்டுவரப்பட்டது. இது பின்னர் முஸ்லிம் திருமண விவாகரத்துச் சட்டம் - 1951 ஆக மாற்றப்பட்டு இன்றுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 1951ஆம் ஆண்டின் சட்ட நடைமுறைகள் மத்ஹப் சார்ந்த பிரிவுகளை கவனத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதை குறித்த சட்டம் வலுப்படுத்தியுள்ளது (Abdullahi, 2020).

இலங்கையில் பின்பற்றப்படும் பிரதான மத்ஹப் பிரிவாக ஷாபிஈப் பிரிவும், குறிப்பிட்ட சில மக்களால் ஹனபி மத்ஹபும் பின்பற்றப்படுகின்றன (Abduroaf, Muneer; et.al, 2016). இச்சட்டத்தை இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு காழிநீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்காழி நீதிமன்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் சில நியாயாதிக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன (Abduroaf, Muneer; et.al, 2016). இவ்வாறு இலங்கையில் 65 நீதிமன்றங்கள் தாபிக்கப்பட்டு நீண்டகாலமாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது (Department of Muslim Religious and Cultural Affairs, 2014).

முஸ்லிம் சொத்துக்கள், நம்பிக்கை நிதி நிறுவனங்களை சீர் செய்யும் நோக்கில் முஸ்லிம் பள்ளிவாயில்கள், தர்ம நம்பிக்கை மற்றும் வக்∴ப் சட்டம் - 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இது முஸ்லிம் திருமண விவாகரத்துச் சட்டத்தின் ஒரு பகுதியாக செயற்படுத்தப்பட்டு வருவதுடன் இச்சட்டமே முஸ்லிம் வக்∴ப் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களை கட்டுப்படுத்தும் முழு அதிகாரத்தைக் கொண்டுள்ளது (Bushra, 2021).

சமூகத்தில் வறுமை ஒழிக்கப்படுவதற்கும், பொருளாதார ஏற்றதாழ்வுகள் களையப்படுவதற்கும் என இஸ்லாம் ஸகாத், அன்பளிப்புக்கள் (ஸதகா), வஸிய்யத், வாரிசுச் சொத்துப் பங்கீடு, குற்றப் பரிகாரங்கள் (கப்பாரா), நஷ்டஈடு, கடன் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களையும், ஒழுங்குகளையும் மிகத் தெளிவாக முன்வைத்துள்ளது (Aashiq, 2019). இவ்வாறான ஒழுங்குகளில் ஒன்றே வக்∴ப் நடைமுறையாகும். சிறந்த கட்டமைப்புடனும், திட்டமிடலுடனும் உருவாக்கப்பட்ட வக்∴ப் சொத்துக்களுக்கான முகாமைத்துவத்தினூடாக அதன் பங்குதாரர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல நன்மைகளை பெறுவர். அத்தோடு வக்∴ப் சொத்துக்களுக்கான வினைத்திறனான முகாமைத்துவத்தினூடாக சமூகத்தில் பொருளாதார முன்னேற்றம், கல்வித்துறை முன்னேற்றம், சமயம் மற்றும் சமூகத்திற்கான சகல வசதிகளிலும் மேம்பாடு போன்ற பல்வேறு விடயங்களில் சாதகமான பல மாற்றங்களை இதன் மூலம் ஏற்படுத்த முடியும் (Mutalib,et.al, 2016). மேலும் தனிநபர் நலனிலிருந்து பொது நலனுக்கு மாற்றப்படும் வக்∴ப் சொத்தானது சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு சமூக, பொருளாதார, கல்விப் பிரச்சினைகளுக்குச் சிறந்த மாற்றுத் தீர்வாகவும் அமைந்துள்ளது. இதனை சிறப்பாக திட்டமிட்டு முகாமை செய்து நடைமுறைப்படுத்திக் காட்டிய பல முன்னோடி நாடுகள் உள்ளன.

செயற்திறன் மிக்க வக்∴ப் நடைமுறைக்கு வலுவான சட்டப் பிரயோகமும், அதிகாரம் வலுவேறாக்கமும் அவசியமாகும். அந்தவகையில் இவ்வாய்வு இலங்கையின் வக்∴ப் சொத்துக்களை முகாமை செய்யும் சட்டமுறைமைகளையும், குறித்த சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களையும் விளங்குதல், இலங்கை குறித்த சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதில் வக்∴ப் நிறுவனங்கள் எதிர்நோக்கும் சவால்களை அடையாளம் காணல் போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த ஆய்வு நோக்கங்களை அடைய பின்வரும் ஆய்வு வினாக்கள் ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டன.

1. இலங்கையில் வக்ஃப் விவகாரங்களை நிர்வகிக்கும் சட்டம் உள்ளதா?
2. நாட்டில் வக்ஃப் விவகாரங்களை நிர்வகிக்க தற்போது நடைமுறையில் உள்ள நிறுவனங்கள் எவை?
3. இலங்கையில் வக்ஃப் வளர்ச்சிக்கு தடையாக உள்ள முகாமைத்துவ, நிருவாக குறைபாடுகள் யாவை?

## 2. இலக்கிய மீளாய்வு (Literature review)

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன. இதன்போது ஆய்வுக்கான இலக்கிய இடைவெளி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

Muhammed Buhary Muhammed Thabith (2019) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட **"Legal Frame Work Of Waqf In Sri Lanka: An Analytical Study"** எனும் ஆய்வுக் கட்டுரையானது இஸ்லாமிய வரலாற்றில் வக்ஃப் துறையின் முக்கியத்துவம், வக்ஃப் சட்டப் பின்னணி, அது சமூக அபிவிருத்தியில் எவ்வாறு பங்காற்றியுள்ளது என்பன தொடர்பாகவும், ஒரு சிறந்த வக்ஃப் நிறுவனம் எவ்வாறு நிர்வாக செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனையும், இலங்கையில் முஸ்லிம் தர்ம நிதியங்கள் அல்லது வக்ஃப் சபை என்பவற்றின் செயன்முறைகளை பகுப்பாய்வு செய்து அதனூடாக வக்ஃப் துணை நிறுவனங்களின் முகாமைத்துவ செயல்பாடுகளையும் தெளிவான முறையில் விளக்கியுள்ளது. அத்துடன் இன்று இலங்கையில் வக்ஃப் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான நவீன வழிமுறைகளையும் அடையாளப்படுத்தி அதனூடாக ஒரு வக்ஃப் நிறுவனம் தனது இறுதி இலக்கினை அடைந்து கொள்ளவும் துணைபுரிகின்றது. மேலும், வக்ஃப் நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், சவால்களும் இவ்வாய்வில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

A.M. Aashiq என்பவரால் மேற்கொள்ளப்பட்ட **The Waqf System in Islam and Its Application in Sri Lanka** எனும் ஆய்வுக் கட்டுரையானது வக்ஃப் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை தெளிவாக சுட்டிக் காட்டுவதுடன், வக்ஃபிற்கான நிபந்தனைகள், வகைகள் மற்றும் வக்ஃப் தொடர்பாக நவீன காலத்தில் எழும் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகளையும் ஒரு சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், கலாசாரம், அழைப்புப்பணி சார்ந்த பல்வேறு துறைகளின் எழுச்சியில் வக்ஃப் ஒழுங்கு முறையானது வியாபித்து காணப்படுகிறது என்பதனையும் இலங்கை வக்ஃப் சபை, வக்ஃப் மன்றம் மற்றும் முஸ்லிம் தர்ம நிதியம் போன்ற நிறுவனங்களின் நோக்கங்கள் நடைமுறைகள், பணிகள் என்பன வரையறுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாய்வானது கோட்பாட்டுசார்ந்ததாக அமையப்பெற்றுள்ளது. வக்ஃப் சபையுடன் தொடர்புடைய அனைத்து நிர்வாக முறைமையிலும் ஏற்படுத்தப்படவேண்டிய சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளது. இருப்பினும் சட்டம் சார்ந்த குறைபாடுகளை ஆராயத் தவறியுள்ளது. எனவே மேற்படி ஆய்வானது வக்ஃப் தொடர்பான ஓர் கோட்பாட்டு ரீதியான விளக்கத்தையும் சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும் அறிந்துகொள்ள இவ்வாய்விற்கு துணை நின்றது எனலாம்.

Fathima Nazeefa Namiz Fawzer (2011) என்பவரால் **"Status Of Waqf Management in Muslim Minority Country: A Case Study of Colombo District (Sri Lanka)"** எனும் ஆய்வுக் கட்டுரையானது முஸ்லிம் சிறுபான்மையாக வாழும் இலங்கை நாட்டில் வக்ஃப் நடைமுறை வினைத்திறனாக செயல்படுகின்றதா? என்பதுடன் அவ்வாறு இலங்கை முஸ்லிம்களின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்த அவர்கள் எவ்வாறான மேலாண்மை செயல்பாடுகளை மேற்கொள்கின்றனர் என்பது தொடர்பாகவும் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது, அத்துடன் இலங்கை முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வக்ஃப் சொத்துக்களை முகாமை செய்வதில் அதன் பங்களிப்பினையும் தெளிவுபடுத்தியுள்ளது.

M.I.M. Jazeel என்பவரால் மேற்கொள்ளப்பட்ட **Financial Management Practices of Mosques in Sri Lanka: An Observation** எனும் ஆய்வானது இலங்கை பள்ளிவாயில்களின் நிதி நடைமுறைகளை ஆய்வு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பள்ளிவாயில் என்பது இஸ்லாத்தின் பார்வையிலே ஒரு சமூக அபிவிருத்தி மையமாகவும், இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிகளின் வாழ்வில் பல்வேறுபட்ட விடயங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பினையும் வழங்குகிறது எனவும் இவரது ஆய்விலே சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் 1956ஆம் ஆண்டு **"The Muslim Mosques and Charitable Trusts of Waqf Act"** எனும் சட்ட ஏற்பாட்டில் பள்ளிவாயில்களின் நிதி மற்றும் சொத்துக்களை நிருவகிக்கும் அதிகாரம் வக்ஃப் சபையினாலும், நம்பிக்கையாளர் சபைக்கும் வழங்கப்பட்டுள்ளது என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார்.

இலங்கை வக்ஃப் சட்டத்துடன் பகுதியளவில் தொடர்புடையதாக இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், குறித்த சட்டத்தின் முகாமைத்துவ மற்றும் நிருவாகக் குறைபடுகளை அடையாளம் கண்டு அவற்றினை இழிவளவாக்குவதற்கு பொருத்தமான தீர்வுகளை வழங்கத் தவறியுள்ளன. மேலும் இலக்கியத்தேடலின் போது ஆய்வாளர்களால் இது ஆய்வு இடைவெளியாக இனங்காணப்பட்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு இலங்கை வக்ஃப் நிருவாக மற்றும் முகாமைத்துவச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகளை இனங்காண்பதிலும், தீர்வுகளை முன்வைப்பதிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## 3. ஆய்வுமுறையியல் (Research Methodology)

இவ்வாய்வானது ஓர் பண்பு சார் ஆய்வாகும். இவ்வாய்விற்கான தகவல்கள் அனைத்தும் இரண்டாம் நிலை தரவு மூலங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டுள்ளன. இருப்பினும், இஸ்லாமிய வக்ஃப் கோட்பாடு, இலங்கை வக்ஃப் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் வக்ஃப் நடைமுறையுடன் தொடர்புடைய சட்டங்கள் பற்றி ஆய்வு செய்வதனால் அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னா போன்றவற்றிலிருந்து நேரடியாகப் பெறப்பட்ட ஆதாரங்களும், இலங்கை அரசின் வர்த்தமானி பத்திரிகை, வருடாந்த அறிக்கைகள் போன்ற முதலாம் நிலை அரச ஆவணங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுடன் இரண்டாம் நிலை தரவு மூலங்களான புத்தகங்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள் மற்றும் இணைய ஆக்கங்கள் போன்றன மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு ஆய்வின் நோக்கம் அடையப்பெற்றுள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட தகவல்கள் ஆவணப்பகுப்பாய்வு, குறியீட்டு முறை பகுப்பாய்வு போன்ற முறைகளின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறப்பட்ட பெறுபேறுகள் சொற்களாகவும், வசனங்களாகவும் விளக்கப்பட்டுள்ளன.

## 4. பெறுபேறுகளும் கலந்துரையாடலும் (Discussion and Results)

### 4.1. இலங்கை வக்ஃப் சட்டத்தின் சட்டக்கட்டமைப்பு (Legal Framework of Waqf in Sri Lanka)

#### 1.1. வக்ஃப் நிருவாகச் சட்டங்கள் (Governing Laws)

ஒரு நாட்டின் மத, கலாசார, பிரதேச அடிப்படைகளில் வாழ்கின்ற தனித்துவமான குழுமங்களின் தனித்துவங்களைப் பேணும் வகையில் அவர்கள் பின்பற்றுகின்ற, அவர்களுக்கே உரித்தான சட்டங்கள், நடைமுறைகள், வழக்காறுகள் முதலானவற்றை உள்ளடக்கியதே தனியார் சட்டமாகும். பல்லின மக்களைக் கொண்ட இலங்கை நாட்டில் பல தனியார் சட்டங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இச்சட்டங்களை சட்டவல்லுனர்கள் ஆள்சார் சட்டங்கள் எனவும், ஆதனம் சார் சட்டங்கள் எனவும் வகைப்படுத்தி நோக்குகின்றனர் (Cooray, 2003). அந்தவகையில் இலங்கை முஸ்லிம்களுக்குரிய முஸ்லிம் தனியார் சட்டம் என்பது ஒரு ஆள்சார் சட்டமாகவும், இதன் ஒரு பகுதியான வக்ஃப் சட்டம் ஆதனம் சார் சட்டமாகவும் முழு இலங்கை முஸ்லிம்களின் மீதும் பிரயோகிக்கப்படுகின்றது. இலங்கை வக்ஃப் சட்டம் நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு

சட்டமாக இருப்பதுடன் வரலாற்றில் இரண்டிற்கும் மேற்பட்ட தடவைகள் சட்டமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சற்று சுருக்கமாக நோக்குவோம்.

1806ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட முஹம்மதியன் சட்டத்தொகுப்பில் முஸ்லிம் தர்ம நம்பிக்கை நிதியம் அல்லது வக்ஃப் தொடர்பில் எவ்வித சட்ட ஏற்பாடுகளும் காணப்படவில்லை. சொத்துக்கள் தொடர்பில் முஸ்லிம்களுக்கு மத்தியில் தோன்றும் முரண்பாடுகளை சிவில் வழக்குகளாகப் பதிவு செய்து மாவட்ட நீதிமன்றங்களில் தீர்க்கப்பட்டு வந்தன. இதே நடைமுறையை வக்ஃப் தொடர்பில் தோன்றும் பிரச்சினைகளிலும் பின்பற்றப்பட்டது. இருப்பினும் இது மதம் சார்ந்த ஒரு நடைமுறை என்பதால் இவைகள் தொடர்பில் தீர்ப்புக்களை முன்வைப்பதற்கு நீதிமன்றங்கள் பெரும் பிரயத்தனம் காட்டவில்லை. இதனை 1987ஆம் ஆண்டு சலீம் மர்சூப் இலங்கையில் முஸ்லிம் தர்ம நம்பிக்கை அமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பதை வெளிப்படையாக முன்வைத்தார். இதனைத் தொடர்ந்து ஜுலை 1952இல் உள்நாட்டு விவகார அமைச்சர் முஸ்லிம் பாராளுமன்ற அங்கத்தவர்களையும், செனட்டர்மார்களையும் கொண்ட குழுவை இந்த விவகாரமான பிரச்சினைகளை புதிதாக ஆராய நியமித்தார். இதன் சிபாரிசுகள் உள்வாங்கப்பட்டு மர்ஹூம் எம்.எச்.எம். அஸீஸின் முயற்சியால் முஸ்லிம் பள்ளிவாசல் தர்ம நம்பிக்கை நிதியம் சட்டம் இல. 51, 1956 இல் நிறைவேற்றப்பட்டு 07-11-1956இல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இதன் பின் குறித்த சட்டம் இரு தடவைகள் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டது. அவை:

1. 1962ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க வக்ஃப் சட்டம்
2. 1982ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வக்ஃப் சட்டம்

நாட்டிலுள்ள பள்ளிவாசல்களையும், முஸ்லிம் புனிதஸ்தளங்களையும் பதிவு செய்வதற்குரிய ஏற்பாடுகளை செய்வதற்கும் பதிவு செய்யப்பட்டவற்றை பராமரிக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் அதிகாரங்களையும், கடமைகளையும், வேளைகளையும் அவர்களின் மீது விதிப்பதற்கும் குறித்த இச்சட்டம் பொறுப்பாக உள்ளது. இறுதியாக திருத்தப்பட்ட 1982ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வக்ஃப் சட்டத்தின் கீழ் முஸ்லிம் பள்ளிவாயல்கள், முஸ்லிம் புனிதஸ்தளங்கள், மார்க்க வழிபாட்டுக்குரிய இடங்கள் மற்றும் தரும நம்பிக்கை பொறுப்புக்கள் யாவும் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த சட்டத்தின் முதன்மைக் கோட்பாடு நீதிபதி அக்பர் உயர் நீதிமன்றத்திலிருந்து இளைப்பாறிய பின்னர் வக்ஃப் சட்டத்தின் எழுத்து படிவம் ஒன்றை வரைந்தார். அதில் பொது மக்களே தர்மகர்தாவைத் தெரிவு செய்ய வேண்டும், அரச சபையிலுள்ள வாக்காளர் பட்டியல் போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி வழிபாட்டுக்காக கூடுபவர்கள் பள்ளிவாயில் நம்பிக்கையாளர் தேர்வு நடாத்த வேண்டும் என ஆலோசனை வழங்கினார். அவருடைய சிபாரிசுகள் சட்டக்கோவையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டது என மஹ்ரூப் தமது கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

குறித்த சட்டத்தின் வக்ஃப் சொத்துக்களை முகாமை செய்வதுடன் தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் பின்வருமாறு:

1. வக்ஃப் சபையை ஸ்தாபிப்பதில் அமைச்சருக்குரிய அதிகாரங்கள்- சட்டத்தின் பிரிவு 5 (1)
2. வக்ஃப் சபை உறுப்பினர்களின் பதவிக்காலம்- பிரிவு 7
3. சபை உறுப்பினர்களின் கடமைகளை சரிவர நிறைவேற்றாமையால் விளையும் பதவி நீக்கம் - பிரிவு 5 (4)
4. பதவி வெற்றிடமாக்கப்பட்டதாக சட்டம் கருதும் சந்தர்ப்பங்கள் - பிரிவு 8
5. வக்ஃப் சபை கூட்டங்களை நடாத்தலும், களைத்தலும்- பிரிவு 9 (1), (7)
6. வக்ஃப் சபை பணிப்பாளரின் அதிகாரங்கள் - பிரிவு 9 (9A)
7. பள்ளிவாசல்களை பதிவு செய்தல் - பிரிவு 10 (1), (2)
8. பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் நியமனம் - பிரிவு 14(1)
9. பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களினால் சமர்பிக்கப்படும் ஆவணங்கள் -பிரிவு 14 (1) (A)

10. பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் பதவி வெற்றிடமாதல்- பிரிவு 15 (1)
11. முஸ்லிம் சமய சட்டங்களையும், மத்ஹபு அடிப்படையிலான மரபுகள் தொடர்பில் பிரிவு 14 (1) (B)
12. பள்ளிவாயல் வாழக்காறுகள், மரபுகள் கடைப்பிடிக்கப்படுவது தொடர்பில் 14 (1) (c) குறிப்பிடுகின்றது.
13. வக்∴ப் நியாய சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்- பிரிவு 9 (D) (1), (2), (3) & (4)

**1.2. வக்∴ப் நிருவாக நிறுவனங்கள் (Governing Bodies)**

- **இலங்கை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

1957ஆம் ஆண்டு இயங்கி வந்த வக்∴ப் கொமிஷன் 1981ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம் சமய, கலாசார திணைக்களமாக இயங்கத் தொடங்கியது (Zarook, 2018). அப்போதைய போக்குவரத்து முஸ்லிம் சமய விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்த மர்ஹூம் எம். எச். முஹம்மத் அவர்களின் அயராத முயற்சியின் பயனாக முஸ்லிம்களின் விவகாரங்களுக்குப் பொறுப்பாக இவ்வாரான ஒரு திணைக்களம் ஏற்படுத்தப்பட்டது (Zarook, 2018). இன்று இது புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. இதன் நோக்கம் இலங்கை நாட்டுக்குள் இஸ்லாமிய கலாசார விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதாகும் (Department of Muslim Religious and Cultural Affairs, 2014). இத்திணைக்களம் முஸ்லிம் சமூகத்தின் நலன் கருதிப் பொறுப்பு வாய்ந்த ஒரு நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. 1994ஆம் ஆண்டு திருத்தத்தின் விளைவாக வக்∴ப் திணைக்களம் முஸ்லிம் சமய, கலாசார அமைச்சுக்கு மாற்றப்பட்டது. அன்று முதல் இன்றுவரை குறித்த அமைச்சின் கீழ் முஸ்லிம் தர்மநம்பிக்கை நிதியமாக வக்∴ப் நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

இவற்றுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் வக்∴ப் சட்டத்தினை நோக்காகக் கொண்டு முஸ்லிம் பள்ளிவாயில்கள் மற்றும் மதஸ்தாபனங்களை பதிவு செய்தல், பதிவுசெய்யப்பட்ட முஸ்லிம் புனித ஸ்தாபனங்கள், முஸ்லிம் தர்ம நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பொறுப்புக்களும், அதிகாரங்களும் செயல்பாடுகளும் முஸ்லிம் தர்மநிதியங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நிருவாகத்தை செயற்படுத்தல் போன்ற விடயங்கள் இத்திணைக்களத்தின் செயற்பாட்டிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன (Department of Muslim Religious and Cultural Affairs, 2014). வக்∴ப் சட்டத்தில் காணப்படும் நிருவாக நடவடிக்கைகள் அனைத்தும் உள்ளடக்கியதாக முஸ்லிம் சமய, பண்பாட்டின் தனித்துவத்தை பேணும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனித சமூகநலன் கருதி அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கான முக்கிய 5 பிரிவுகளை உள்ளடக்கியதாக இத்திணைக்களக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

1. நிர்வாக மற்றும் அபிவிருத்தி பிரிவு
2. நிதிப் பிரிவு
3. மத, மற்றும் கலாசார பிரிவு
4. **வக்∴ப் பிரிவு (வக்∴ப் திணைக்களம்)**
5. உள்ளகக் கணக்காய்வு பிரிவு

வக்ப் சட்டத்தின் கீழ் ஒரு முஸ்லிமே அதன் பிரதம நிருவாகியாக இருத்தல் வேண்டும். அதன்படி வக்∴ப் ஆணையாளராக ஒரு முஸ்லிம் நியமிக்கப்படுகின்றார். அவருக்கு உதவியாக ஏழு பேர் கொண்ட ஒரு வக்∴ப் சபையும் அமைச்சரால் நியமிக்கப்படுகின்றது. இவர்களில் வக்∴ப் சபை செயலாளர், வக்∴ப் நியாய சபைச் சொயலாளர் ஆகிய இருவர் பதவிவழி பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

**1.3. வக்∴ப் முகாமைத்துவ நிறுவனங்கள் (Managing Bodies)**

- **வக்∴ப் சபை**

இச்சபை முஸ்லிம் சமய, கலாசார அமைச்சின் கீழ் இயங்கி வரும் அதேநேரம் பள்ளிவாயில்கள், அதன் நிர்வாகம், அதற்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்து வைத்தல் போன்ற பல கடமைகளை ஆற்றி வருகிறது. வக்∴ப் திணைக்களத்திற்கு பொறுப்பாக

முஸ்லிம் சமய, கலாசார அமைச்சின் பணிப்பாளரே காணப்படுகிறார். இச்சபை பணிப்பாளரோடு ஏழு அங்கத்தவர்களைக் உள்ளடக்கியதாக அமையப் பெற்றுள்ளது. இவர்கள் இலங்கை நீதி அமைச்சரினால் நேரடியாக நியமிக்கப்படுகின்றனர். எந்த ஒரு உறுப்பினரும் தமது கடமையை சரியான முறையில் மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவரை கடமையிலிருந்து நீக்கும் அதிகாரம் நீதி அமைச்சருக்குண்டு. இதனை சட்டத்தின் பிரிவு 5(4) இன் படி நாட்டின் எந்த ஒரு நீதிமன்றமும் கேள்விக்குட்படுத்த முடியாது. இவ்வாறு நியமனம் பெறும் அங்கத்தவர்களின் பதவிக்காலம் மூன்று வருடங்களாகும் (Zarook, 2018). இஸ்லாத்தை விட்டு வெளியேறுதல், பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுதல், ஒரே சமயத்தில் இரண்டு பள்ளிவாயில்களில் தர்ம நம்பிக்கையாளராக தெரிவு செய்யப்பட்டு பணியாற்றுதல் போன்றன வக்ஃப் சபை அங்கத்துவம் இழக்கப்படுவதற்கு காரணங்களாக அமைகின்றன (வக்ஃப் சட்டத்தின் பிரிவு-7, பிரிவு-5 (4)). இவற்றுக்கு மேலதிகமாக ஒரு அங்கத்தவர் பதவியை இழக்கும் நிலைகளை பின்வருமாறு என சட்டம் குறிப்பிடுகின்றது.

1. இலங்கை குற்றவியல் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்படுதல்
2. ஏதேனும் நீதிமன்றினால் குறித்த அங்கத்தவர் நஸ்டமடைந்தவர் (வேலையை இழந்தவர்) என தீர்ப்பு வழங்கப்படல்
3. முன் அனுமதியின்றி தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு சபை கூட்டங்களுக்கு சமூகமளிக்கத் தவறுதல்
4. பிரிவு 5(4) இல் குறிப்பிட்ட காரணம் ஒன்றிக்காக அமைச்சரினால் பதவி நீக்கப்படல்
5. தனது சொந்த விருப்பின் பெயரில் பதவி துறத்தல்

இலங்கையின் மஸ்ஜிதுகள் மற்றும் நம்பிக்கை நிதியங்களுக்கான நம்பிக்கையாளர்களை நியமித்தல், அவர்களை பதவி நீக்கம் செய்தல் மற்றும் அவற்றின் செயற்பாடுகளை கண்காணித்தல், மஸ்ஜிதுகள், நம்பிக்கை நிதியங்கள் போன்ற நிறுவனங்களின் சொத்துக்களை நிர்வகித்தலும், பராமரித்தலும், மேற்படி நிறுவனங்களின் கணக்குகளை பரிசோதித்து சரிபார்த்தல், மஸ்ஜிதுகளைப் பதிவுசெய்தல், வக்ஃப் சபையினால் வழங்கப்பட்டுள்ள சட்டங்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை விசாரித்து தீர்ப்பு வழங்கல் போன்றவைகள் இதன் பிரதான பணிகளாகும். வக்ஃப் சபையால் வழங்கப்பட்ட தீர்வுகளில் ஒருவர் அதிருப்தி இருப்பின் மேன் முறையீடு ஒன்றை மேற்கொள்வதற்காக வக்ஃப் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்றையும் கொண்டுள்ளது. சுருக்கமாக கூறின், வக்ஃப் சபை வக்ஃப் சொத்துகளுடன் தொடர்புடைய நிர்வாகச் செயற்பாடுகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளது. அதன் நடைமுறைச் செயற்பாடுகள் பள்ளிவாயில்கள் நம்பிக்கையாளர்களால் அல்லது நம்பிக்கை சபையால் முகாமை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

- **வக்ஃப் நியாய சபை (வக்ஃப் மன்றம்)**

காலப்போக்கில் சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதால் 1982இல் 33ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிர்வாகத் துறையில் பாரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக மாவட்ட நீதிமன்ற அதிகாரம் பொருந்திய மூவர் கொண்ட வக்ஃப் நியாய சபை (Wakf Tribunal) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இம்மூவரும் சட்டத்துறை அறிஞர்களாக காணப்படுவதை சட்டம் தேவைப்பாடாக கொண்டுள்ளது. இதன் செயலாளராக ஒரு சட்டத்தரணி காணப்படுவார். இவர்களின் நியமனம் நீதிச்சேவை ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படுகின்றது. மாவட்ட நீதிமன்றம் ஒன்றுக்குச் சமமான அதிகாரத்தைக் கொண்டுள்ள இந்நீதிமன்றம் ஒரு மேன்முறையீட்டு (Court of Appeal) நீதிமன்றம் ஆகும்.

வக்ஃப் நீதிமன்ற அதிகாரங்கள், நம்பிக்கை நிதியம் அல்லது வக்ஃப் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்ஃபின் எந்தவொரு நம்பிக்கையாளரை நீக்குவது, தேவைப்படின் நம்பிக்கையாளரையோ, நம்பிக்கையாளர்களையோ நம்பிக்கை நிதியத்திற்கு அல்லது வக்ஃபிற்கு நியமிப்பது, நிதி சம்பந்தப்பட்ட அறிக்கைகளை மன்றத்துக்கோ அல்லது சபைக்கோ சமர்ப்பிக்கும் படி அறிவுரை வழங்குதல், நம்பிக்கை நிதியம் அல்லது வக்ஃப் சொத்தின் ஒரு பகுதியை ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்ஃபின் நோக்கங்களுக்கேற்ப நலன் கருதி ஒதுக்கும் பிரகடனத்தை வெளியிடுதல், நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்ஃபின் நிர்வாகத்திற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்துவது, நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்ஃபின்

நம்பிக்கையாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட செயலை செய்யுமாறு பணிப்பது, நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்ஃபின் எந்த ஒரு நம்பிக்கையாளரை நம்பிக்கைக்கு முரணாக அல்லது கடமையில் தவறியதாகவோ குற்றம் புரிந்தார் எனப் பிரகடனப்படுத்துவது, நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்ஃபின் நம்பிக்கையாளர் தாம் செய்த நம்பிக்கைக்கு முரணான அல்லது கடமை தவறுகள் காரணமாக ஒரு தொகையை நஷ்டஈடாக வழங்குமாறு தீர்ப்புக் கூறுவது.

மேலும், மாவட்ட நீதிமன்றத்துக்கு உள்ள எல்லா அதிகாரங்களும் வக்ஃபு நீதிமன்றம் பெற்றுள்ளது. உதாரணமாக சாட்சிகளை வரவழைத்தல் அல்லது வருகையை வற்புறுத்தல், ஆவணங்களை வழங்குமாறு வற்புறுத்தல், சாட்சிகளின் சத்தியம் அல்லது உறுதிமொழி விவகாரங்கள். மன்றம் எல்லா கருமங்களிலும் மாவட்ட நீதிமன்ற வழிமுறைகளை பின்பற்றுவதோடு தீர்ப்புகளை செயல்படுத்துவதில் மாவட்ட நீதிமன்ற அதிகாரத்தை பெறுகிறது. மேலும் குடியியல் வழிமுறை கோவையை மாற்றும், செயல்படுத்தும் அதிகாரங்களை மாவட்ட நீதிமன்ற மட்டத்தில் பூரணமாக பின்பற்றும். வக்ஃப் நீதிமன்றம் ஆரம்ப மற்றும் மேன்முறையீடு ஆகிய இரண்டு அதிகாரங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- **முஸ்லிம் தர்ம நம்பிக்கை நிதியம்**

பள்ளிவாயில்கள், முஸ்லிம் புனிதஸ்தளங்கள், இஸ்லாமிய மத வழிபாட்டுத்தளங்கள் மற்றும் முஸ்லிம் தர்ம நிதியம் அல்லது வக்ஃப் என்பன இலங்கை முஸ்லிம் பள்ளிவாயில் மற்றும் தர்ம நிதியம் அல்லது வக்ஃப் சட்டக்கோவை மூலம் நிர்வாகிக்கப்படுகின்றன. இவ்வமைப்புக்கள் அனைத்தும் வக்ஃப் சபையின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். இந்தச் சட்டக் கோவையின் பாகம் இரண்டு, மூன்று பள்ளிவாயில்கள் சம்பந்தமாகவும், பாகம் நான்கு முஸ்லிம் புனிதஸ்தளங்கள் மற்றும் இஸ்லாமிய மத வழிபாட்டு தளங்கள் பற்றியும் பாகம் ஐந்து முஸ்லிம் தர்ம நிதியம் அல்லது வக்ஃப் ஆகியவைகள் பற்றியும் குறிப்பிடுகிறது.

முஸ்லிம் தர்ம நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்கள்: முஸ்லிம்களின் அல்லது அவர்களின் ஒரு பகுதியினரின் வறுமைக்கு நிவாரணம் அளிப்பது, முஸ்லிம்கள் அல்லது அவர்களின் ஒரு பகுதியினரின் கல்வி மேம்பாட்டுக்காக, பொதுவாக இஸ்லாத்தை மேம்படுத்துவதற்காக, எந்த ஒரு பள்ளிவாயிலையோ அல்லது இஸ்லாமிய புனிதஸ்தளத்தையோ அல்லது இஸ்லாமிய மத வழிபாட்டுத் தளத்தையோ நிர்வாகம் செய்தலும் அவற்றில் மார்க்க வழிபாட்டுக் கிரியைகளை நிறைவேற்றுதல், முஸ்லிம்கள் அல்லது அவர்களின் ஒரு பகுதியினருக்கு ஏதாவதொரு பயனளிக்கக்கூடிய நோக்கத்திற்காக முஸ்லிம் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு மார்க்க சமய, தர்ம நோக்கத்திற்காக ஒரு பள்ளிவாயிலை முஸ்லிம் தர்ம நிதியம் அல்லது வக்ஃப் சபையுடன் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், அதன் நம்பிக்கையாளர் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும், நம்பிக்கையாளர்களின் பெயர்கள், நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்ஃபின் எல்லா சொத்துக்களின் விபரங்கள், அந்த சொத்துக்களின் பூரண வருமானத் தொகை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நிகழ்வுகளிலிருந்து 12 மாத காலம், அந்த சொத்துக்காக அரசாங்கத்துக்கோ அல்லது பகுதி அதிகாரிக்கோ வருடா வருடம் வழங்கும் எல்லா வரிகளும் கொடுப்பனவுகளும், சராசரி வருட செலவுகள், நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்ஃபின் பணம் இருப்பின் அதற்காக ஒதுக்கி வைத்த தொகை, ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும், ஒவ்வொரு ஊழியர்களுக்கும் நம்பிக்கை நிதியம் அல்லது வக்ஃபிலிருந்து வழங்கும் ஊதியம், பள்ளிவாயில்களுக்கு வழங்கும் கொடுப்பனவுகள், வேறு சமய தேவைக்காக.

வேறு தேவைக்காக: வக்ஃபு சபைக்கு ஒவ்வொரு வருடமும் ஜுன் முதலாம் திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட படிவங்களில் செலவு, வருட வருமானம் மற்றும் மார்ச் 31ம் தேதி வரை கணக்கு விபரங்களை அனுப்புவது தர்ம நிதியத்தின் அல்லது வக்ஃபு நம்பிக்கையாளரின் கடமையாகும். இந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் மூலமோ அல்லது சபையினால் அங்கீகரிக்கப்பட்டவர் மூலமோ உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சபை அல்லது அனுமதிக்கப்பட்ட அதிகாரிக்கு தர்ம நிதியத்தின் ஆவணங்களை பகல் காலத்தில் பரிசோதனை செய்யலாம் மற்றும் நம்பிக்கையாளரிடமிருந்து தகவல்களை, ஆவணங்களைக் கோரலாம். சபையின் அனுசரணையோடு பணிப்பாளர் அல்லது தர்ம


ISBN 978-624-5736-14-0

நிதியத்தின் அல்லது வக்∴பில் ஆர்வமுடைய ஐவர் பணிப்பாளர் சான்றிதழோடு மாவட்ட நீதிமன்றத்தில் அந்த நிதியம் அல்லது வக்∴பின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையோ சம்பந்தமாக வழக்கு தொடரலாம். நிதியத்தின் அல்லது வக்∴பின் சொத்து விபரங்களைக்கோரி மற்றும் மேலதிக வேறு சகாயத்தை வழக்கின் சூழ்நிலையை பொருத்தும் வழங்குமாறு கோரலாம்.

## 2. வக்∴ப் சொத்துக்களை முகாமை செய்வதில் வக்∴ப் நிறுவனங்கள் எதிர் நோக்கும் சவால்கள்

இப்பிரிவில் இலங்கையில் வினைத்திறனான வக்∴ப் முகாமைத்துவத்திற்கு தடையாக அமையும் சட்டப்பிரச்சினைகள், சவால்கள் அடையாளம் காணப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

### 2.1. "வக்∴ப்" என்பதை தெளிவாக வரையறுப்பதற்கு குறித்த முஸ்லிம் தர்ம நம்பிக்கை நிதியச்சட்டம் தவறியுள்ளமை.

உலகின் பல நாடுகளின் சட்டங்கள் வக்∴ப் என்பதை தெளிவாக வரையறை செய்துள்ளதுடன், வக்∴புடன் தொடர்புபடக்கூடிய சொல்லாடல்களான ஹிபத், ஸதகா, ஸகாத் போன்றவற்றிற்கும் தெளிவான விளக்கங்களை வழங்கியுள்ளன. இதற்கு சிறந்த உதாரணமாக 1913ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய வக்∴ப் சட்டம் இவ்வாறு வரையறை செய்கின்றது. "இஸ்லாமிய மதத்தைத் தழுவிய ஒருவரால் மார்க்கம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தூய தர்ம நோக்கில் நிரந்தரமாக செய்யப்படும் அர்ப்பணமாகும்." இவற்றுடன் இணைந்ததாக வக்∴பாக வழங்கப்படும் சொத்துக்களின் நிபந்தனைகள் போன்றனவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதற்கு மாற்றமாக இலங்கையின் 1956ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க முஸ்லிம் தர்ம நம்பிக்கை நிதியச்சட்டம் (1956ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க வக்∴ப் சட்டம்) தெளிவான வரையறையை வழங்கத் தவறியுள்ளது. இதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட 1962, 1982 ஆம் ஆண்டின் இரு சட்ட மாற்றங்களிலும் இது நிவர்த்தி செய்யப்படாது குறையாகவே இருந்து வருகின்றது. மேலோட்டமாக எடுத்து நோக்குகின்றபோது சட்டம் பொருள்கோடல் வழங்காத ஏராளமான விடயங்கள் இருப்பினும் வக்∴ப் சட்டத்தில் இக்குறைபாடு காணப்படுவது இஸ்லாமிய ஷரீஆ பற்றிய அறிவுப் பின்னணி அற்ற சட்ட அறிஞர்களும், ஏனையோரும் இஸ்லாத்தில் உள்ள ஏனைய ஸகாத், ஸதகா போன்றன ஒன்றாக கணக்கிடப்பட்டு தவறுகள் இடம்பெறுவதற்கு இது வாய்ப்பாக அமையக்கூடும் என்பதனாலேயே இதனை முதன்மைக் குறைபாடாக இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

1814ஆம் ஆண்டின் 2செல் அறிக்கையில் தீர்க்கப்பட்ட வழக்கான குல்ப் அலி ஹுஸம் எதிர் செய்யத் அலி என்னும் வழக்கில் நீதிமன்றம் வக்∴ப் என்பதற்கு இவ்வாறு பொருள்கோடல் வழங்கியது. "வக்∴ப் என்பது ஏதேனும் ஒரு சொற்றொடர் மூலம் தெளிவான எண்ணத்துடன் ஒரு அன்பளிப்பாளர் சமயப்பணி அடிப்படையில் வழங்கப்படும் சொத்தாகும்". இது ஆழமான பொருள்கோடல் வழங்கத் தவறியுள்ளமையை ஷரீஆ அறிவுடைய எவராலும் இலகுவாக புரிந்து கொள்ள முடியும். மேலும் இலங்கையில் பெரும்பாலான அம்சங்கள் ஷாபிஈ மத்ஹப்பிரிவை முதன்மைப்படுத்தியே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது விடயத்தில் குறித்த மத்ஹபின் வரையறைகளை பின்பற்ற நீதிமன்றம் தவறியுள்ளதுடன் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள வரையறை ஷாபிஈ மத்ஹபின் வரையறையில் இருந்து வேறுபடுவதாகவும் அமைந்துள்ளது. இதற்கு இமாம் ஷாபிஈ அவர்களின் வரைவிளக்கணம் சான்று கூறுகின்றது "பிரயோசனம் அளிக்கக்கூடிய ஒரு பொருளை அல்லது சொத்தை அதன் அசல் தன்மை நீங்காமல் தடுத்து வைத்தல்" என்பதாகும்.

ஒரு சட்டம் சார்ந்த முரண்பாடுகள் தோன்றும் போது இவ்விரு வரையறைகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடு, சட்டம் தெளிவான வரையறை வழங்கத் தவறியுள்ளமை போன்றன பாரிய பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும் ஒன்றாக மாறக்கூடும். இவ்வாறான ஒரு பிரச்சினையையே இலங்கை முஸ்லிம்கள் முஸ்லிம் தனியார் சட்டத்தின் சில பிரிவுகளில் எதிர்நோக்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### 2.2. வக்∴ப் நியாய சபைக்கு (நீதிமன்றத்துக்கு) ஒரு தீர்ப்பை திருத்தி அமைக்கும் அதிகாரம் வழங்கப்படாமை.

இலங்கை முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து நடைமுறைகளுக்குப் பொறுப்பாக உள்ள காழி நீதிமன்றங்களில் வழங்கப்படுகின்ற வழக்குகளின் தீர்ப்புக்களை மாற்றியமைக்கும் அதிகாரம் காழி மேன்முறையீடு சபைக்கு வழங்கப்படுட்டுள்ளது. இதனால் நீதித்துறைச் சார்ந்த தவறுகளை மாற்றியமைக்கவும் வாதி, பிரதிவாதி ஆகிய இரு தரப்பினரும் தக்க நீதியைப் பெற்றுக் கொள்ள இது வாய்ப்பாக அமைகின்றது.

இதற்கு மாற்றமாக வக்ஃப் சபையால் வழங்கப்படுகின்ற தீர்ப்புகளை மீள்பரிசீலனை செய்வதற்கும், வக்ஃப் நீதிமன்றத்துக்கு இடைக்கால நிவாரணம் வழங்கும் அதிகாரம் வழங்கப்படாது உள்ளமையும் இங்கு அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக, வஸில் எதிர் ரியால் WT/81 என்ற வழக்கில் வெள்ளவத்தை ஜும்ஆ பள்ளிவாயிலில் நடைபெறவிருந்த நம்பிக்கையாளர் தேர்தலை இடைநிறுத்தக் கோரி செய்த விண்ணப்பம் வக்ஃப் நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என தீர்ப்பளிக்கப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (Aashiq, 2019). இது ஒரு சுதந்திரமான வழக்கு விசாரணைக்கும், நியாயமான தீர்ப்பு வழங்கும் செயற்பாட்டிற்கும் பாதகமாக அமைகின்றது. இன்னும் இவ்வதிகாரம் வழங்கப்படாமையால் வக்ஃப் நியாயசபையின் பணிகள் தொடர்பில் வினாக்கள் எழுப்பப்படவும் இது வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்த அதிகாரமும் நீதிமன்றத்திற்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

### 2.3. வக்ஃப் நியாய சபைக்கு மாவட்ட நீதிமன்றம் ஒன்றிக்கு வழங்கப்பட்டுள்ளது போன்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தீர்ப்புக்களை செயற்படுத்துவதில் தொடர்ந்தும் மாவட்ட நீதிமன்றத்தில் தங்கி நிற்கின்றமை.

வக்ஃப் நியாயசபைக்கு தர்ம நம்பிக்கை நிதியம் வக்ஃப் சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் இலங்கை வக்ஃப் சட்டத்தின் பிரிவு 95இன் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட நீதிமன்றத்திற்குள்ள சாட்சிகளை அழைத்தல் 9F, சாட்சிகளின் வருகையை வற்புறுத்தல், ஆவணங்களை வழங்குமாறு வற்புறுத்தல், சாட்சிகளுக்கு சத்தியம் அல்லது உறுதிமொழி போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிரிவு 9G இன்படி சபை எடுக்கும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் மாவட்ட நீதிமன்றின் நடைமுறையை பின்பற்றப்படல் வேண்டும் எனக்குறிப்பிடுகின்றது. இதனால் தொடர்ந்து மாவட்ட நீதிமன்றில் தங்கி நின்று செயற்படும் நிலைக்கு இச்சபை தள்ளப்படுகின்றது.

இதற்கு மாற்றமாக முஸ்லிம் விவாகரத்து விடயங்களையும், தாபரிப்புடன் தொடர்புடைய தீர்ப்புக்களை செயற்படுத்துவதற்கு காழி நீதிமன்றங்களுக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அங்கு இவ்வாறு மாவட்ட நீதிமன்ற நடைமுறை பின்பற்றப்படல் வேண்டும் என்பதை தேவைப்பாடாக சட்டம் குறிப்பிடவில்லை. இருப்பினும் வக்ஃப் நியாயசபைக்கு இவ்வாறான நடைமுறையை சட்டம் குறிப்பிடுகின்றது. இவ்விரு நீதிமன்றங்களிலும் தீர்க்கப்படும் வழக்குகள் சமனான சிவில் வழக்குகளாகும். எனவே, இச்செயற்பாடு சபையின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு தடையாக அமைகின்றது.

### 2.4. வக்ஃப் சொத்துக்கள் வெறுமனே பள்ளிவாயில் மற்றும் மார்க்க பணிகளுக்காக மாத்திரம் செலவிடப்படுகின்றமை

இலங்கை வக்ஃப் நிறுவனங்கள் தங்கள் பணிகளை வெறுமனே பள்ளிவாயில், அடக்கஸ்தளங்கள் மற்றும் அறபு மத்ரஸாக்கள் என ஆன்மீகத்துடன் தொடர்புடைய சூழலுடன் மாத்திரம் சுருக்கிக் கொண்டுள்ள ஒரு நிலையை காண முடிகின்றது. பொதுமக்களும் வக்ஃப் சொத்துக்ளை வழங்குகின்றபோது பள்ளிவாயில்கள், அடக்கஸ்தளங்கள், அறபு மத்ரஸாக்கள் போன்ற இடங்களையே முதன்மைப்படுத்தி தங்கள் சொத்துக்களை வழங்கும் நடைமுறையை காண முடிகின்றது. இவ்வாறு வழங்குவதன் மூலம் சமூகத்தில் வறுமையை குறைக்கவும், நலிவுற்றவர்கள் நலன் பெறவும் வழி ஏற்படாது. இலங்கை எத்தனையோ அநாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நடாத்தப்பட பள்ளிவாயில்களுக்கு மேல் பள்ளிவாயில்கள் கட்டி அழகு பார்ப்பதில் என்ன பயன் உள்ளது?.

இஸ்லாம் வக்ஃப் நடைமுறையை அறிமுகப்படுத்தியதன் பின்னணியில் உள்ள முதன்மை நோக்கம் சமூகம் வளம் பெற வேண்டும், சமூகத்தில் வறுமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதாகும். வக்ஃப் சொத்துக்கள் கல்வி, சுகாதார, சமூக, கலாசாரத் துறைகளை மேம்படுத்தும் வகையில் முஸ்லிம்களின் சமூக முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து பகுதிகளிலும் செலவழிக்கப்பட வேண்டும். முழுமையாக இலங்கையின் வக்ஃப் சொத்துக்கள்


ISBN 978-624-5736-14-0

சமூக பணிகளின் செலவிடவில்லை எனக் கூற முடியாது. மாறாக செலவிடப்படும் செயற்பாடுகள் அதிகரிக்கப்படல் வேண்டும் என்பதே எம்சார்ந்த வாதமாகும்.

### 2.5. நம்பிக்கையாளர்கள் அல்லது முதவல்லிகளின் தெரிவு முறையில் உள்ள குறைபாடுகள்

இலங்கையில் அதிகமான மக்களால் பின்பற்றப்படும் ஷாபிஈ மத்ஹபிலோ அல்லது ஷாபிஈ சட்ட வல்லுனர்களுக்கு மத்தியிலோ "முதவல்லி" நியமனம் பற்றி குறிப்பாக குறிப்பிடாவிட்டாலும், முதவல்லியை நியமனம் செய்யும் அதிகாரம் வாகிப் என்னும் வக்∴ப் செய்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவே இஸ்லாமிய ஷரீஆவின் நிலையுமாகும்.

இலங்கையில் முதவல்லியின் நியமனத்தை இரு பிரிவுகளாக நோக்க முடியும். ஒன்று தனி நபர் ஒருவரை நம்பிக்கையாளராக நியமித்தல் (Sole Trustee). இரண்டாவது இலங்கை வக்∴ப் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பள்ளிவாயில் நம்பிக்கையாளர்கள் முதவல்லியாக தொழிற்படல். வக்∴ப் செய்பவர் உயிருடன் இல்லாத சந்தர்ப்பத்தில் ஒருவரை முதவல்லியாக நியமிக்கும் அதிகாரம் நீதிமன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. செய்யது முகம்மது கவ்ஸ் 68 MLJ 684, இஜாஸ் அகமட் ILR 39ALL 228 போன்ற வழக்குகளின் தீர்ப்புக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இலங்கை வக்∴ப் சட்டம் நம்பிக்கையாளர் தெரிவு மற்றும் கடமை தொடர்பிலேயே கவனம் செலுத்தியுள்ளது. மேலும், நம்பிக்கையாளர்களின் தெரிவு சட்டத்தின் பிரிவு 14இன் படி மூன்று முறைகளில் இடம் பெறுகின்றன (Ameen,2006). அவை:

1. பிரிவு 14 (1) (அ) இற்கு அமைவாக வக்∴ப் சபை பள்ளிவாயில் நம்பிக்கையாளர்களைத் தெரிவு செய்தல்.
2. பிரிவு 14 (1) (ஆ) இற்கு அமைவாக பள்ளிவாயில் நம்பிக்கையாளர்களை தெரிவு செய்ய மறுக்கும் சந்தர்ப்பத்தில் வக்∴ப் சபை ஜமாஅத் அங்கத்தவர்களில் இருந்து நம்பிக்கையாளர்களைத் தெரிவு செய்தல்
3. பிரிவு 14 (1) (இ) இற்கு அமைவாக வக்∴ப் சபை விசேட நம்பிக்கையாளர்களை தெரிவு செய்தல்

மேற்கூறப்பட்ட மூன்று சட்டப்பிரிவுகளிலும் வக்∴ப் சபைக்கு நம்பிக்கையாளர்களை நியமிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டு இருப்பினும், நடைமுறையில் இவ்வதிகாரம் பிரயோகிக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம், பிரிவு 14 (1) (அ) இல் நம்பிக்கையாளர்களின் தெரிவு பள்ளிவாயில் வழக்காற்றின் படி, பொதுமக்களால் உருவாக்கப்பட்ட நடைமுறை, நிர்வாக வழிமுறைகளைப் பின்பற்றி இடம் பெறுகின்ற சமயத்தில் குறித்த தெரிவினை அங்கீகரிக்கும் அதிகாரம் மாத்திரமே வக்∴ப் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனாலேயே பொருத்தமற்ற முதவல்லிகள் நம்பிக்கையாளர்களாக தெரிவு செய்யப்படும் நிலை ஏற்படுகின்றது.

மேலும், ஏனைய இரு நிலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. காரணம் ஒவ்வொரு பள்ளிவாயிலும் தங்களுக்கென்று தனியான நிருவாக முறைகளையும், தெரிவு முறைகளையும் பின்பற்றுகின்றமையாகும். எனவே, இத்தெரிவு முறைக்கு சட்டம் அனுமதி வழங்குவதே செல்வம் வசதி படைத்தவர்கள் தொடர்ந்தும் நம்பிக்கையாளர் பதிவிகளுக்கு தெரிவாவதற்கும், தகுதி படைத்தவர்கள் ஓரங்கட்டப்படுவதற்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது. இதற்கு சிறந்த உதாரணம் தெவடகஹ பள்ளிவாயல் ஸியாரம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### 2.6. நீண்ட காலம் ஒரே நம்பிக்கையாளர் சபை பதவி வகித்தல் அல்லது பொறுப்பதிகாரியாக கடமையாற்றல்

ஒரு நம்பிக்கையாளர் சபையின் பதவிக்காலம் 3 வருடங்களாகும். சட்டத்தின் பிரிவு 14 (2) படி இக்காலம் முடிந்த பின் குறித்த நம்பிக்கையாளர் சபையின் தலைவர் அல்லது பணிப்பாளர் "பொறுப்பதிகாரி" ஆக செயற்பட்டு அடுத்த நம்பிக்கையாளரை தெரிவு செய்யும் வரை தனது பொறுப்புக்களை ஆற்ற முடியும். இவ்வாறு வழங்கப்பட்டிருப்பது ஒரு நம்பிக்கையாளர் பதவி முடிவுக்கும் இன்னுமோர் நம்பிக்கையாளர் சபையின் தெரிவுக்கும் இடையில் உள்ள காலப்பகுதி மிகை நிரப்ப வேண்டும் என்ற நன்நோக்கிலாகும். இதற்கு


ISBN 978-624-5736-14-0

மாற்றமாக ஒரே நம்பிக்கையாளர் சபையின் நீண்டகாலமாக பொறுப்பதிகாரியாக பதவிவகித்து வருகின்றமை இங்கு பாரிய சவாலாக உள்ளது. மேலும் இது தொடர்பில் வக்ஃப் சபை முறையாக நடவடிக்கை எடுக்காது செயற்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**2.7. வக்ஃப் சொத்துக்கள் முறையான பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பில் வாரிசுகள் பராமுகமாக செயற்படல்.**

ஒரு வக்ஃப் செய்யக்கூடியவருக்கு தனி ஒருவரை முதவல்லியாக நியமிக்கும் உரிமை உள்ளது. இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் வாரிசுதாரர்களாகவோ அல்லது ஏனைய பிற நபர்களாகவோ இருக்க முடியும். மேலும், ஷாபிஈ மத்ஹபின் கருத்தின் படி சொத்துக்கள் அல்லாஹ்வின் உடைமைக்கு மாறுவதாகும். அதன் பயனை பெற்றுக் கொள்பவர்கள் தவறுகின்ற போது குறித்த சொத்து அர்ப்பணம் செய்தவரின் வாரிசுகளுக்குரியதாகும். இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் வக்ஃபாக வழங்கப்படும் சொத்துக்கள் வக்ஃப் வழங்கிய நபர் மரணித்த பின்னரும் அவருக்கு நன்மையை பெற்றுக் கொடுக்கும் ஸதகதுல் ஜாரியா வகையைச் சேர்ந்ததாகும். எனவே, இது தொடர்பில் அக்கறையுடன் வாரிசுகள் செயற்படல் வேண்டும்.

இலங்கையின் வக்ஃப் முகாமைத்துவ நடைமுறை வக்ஃப் சபைகளால் முகாமை செய்யப்படுகின்ற போதிலும் ஒருவர் நிபந்தனையுடன் வக்ஃப் செய்யப்பட்டிருப்பின் அதாவது “எனது மரணத்தின் பின் இச்சொத்துக்களுக்கு முதவல்லியாக இவர் செயற்படுவார். இதனை பராமரிப்பு மற்றும், விற்பனை தொடர்பில் குறித்த நபரின் முன்னனுமதி பெறப்படல் வேண்டும்” என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பின், இச்சந்தர்ப்பத்தில் வக்ஃப் சபையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை தனி முதவல்லி பெறுகின்றார். இந்நிலை இலங்கைச் சூழலில் நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. வக்ஃபாக வழங்கியதும் தமது பொறுப்பு நீங்கி விட்டது என்ற மனநிலை வாரிசுதாரர்களிடம் காணப்படுகின்றது. இந்நிலை மாற்றியமைக்கப்படல் வேண்டும். வக்ஃபாக வழங்கப்பட்ட சொத்தின் சமூகநலப்பணிகளுக்காக செலவிடப்படுகின்றனவா என்பது தொடர்பில் வாரிசுகள் விழிப்புடன் செயற்படல் வேண்டும்.

**2.8. “வக்ஃப்ணமார்” எனப்படும் எழுத்து மூலமான வக்ஃப் ஆவணங்கள் முறையாக பேணப்படாமை.**

இலங்கை வக்ஃப் சட்டத்தின் கீழ் ஒரு வக்ஃப் செயன்முறை இரு முறைகளில் இடம்பெறுவதற்கு சட்டம் அனுமதி அளிக்கின்றது. ஒன்று ஒரு மனிதன் தான் இந்த இந்த சொத்துக்களை வக்ஃப் சொத்தாக வழங்குவதாக சொற்றொடர்கள் மூலம் குறிப்பிடுதல், இரண்டாவது ஒருவர் தனது இறுதி மரணசாசனத்திலோ அல்லது உயிலிலோ குறித்த சொத்தை வக்ஃப் செய்வதாக எழுத்து மூலமாக உறுதி வழங்குவதாகும். இதனை வக்ஃப்ணமார் என வக்ஃப் சட்டம் குறிப்பிடுகின்றது. இதனை பாத்து குட்டி உம்மா AIR. 1937 M 731 என்னும் வழக்கில் ஏற்று தீர்ப்பளித்துள்ளது. இவ்வாறான அம்சங்களை உள்ளடக்கிய ஒரு ஆவணம் வக்ஃப் சபையாலோ அல்லது நம்பிக்கையாளர் சபையாலோ முறையாக பேணப்படாமை குறைபாடாக உள்ளது.

**2.9. வக்ஃப் சொத்துக்களை முகாமை செய்வதில் காழி நீதிபதிகளின் தலைஈடு காணப்படுகின்றமை.**

உமையாக்கள் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும் வக்ஃப் நிதியம் காழிமார்களால் மேற்பார்வை செய்யப்பட்டது. அப்பாஸிய கலிபாக்களின் காலத்திலும் இதே அமைப்பு பின்பற்றப்பட்டு வந்துள்ளது. வக்ஃபாக வழங்கப்பட்ட சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு ஒரு நிறுவனத்திற்கோ அல்லது ஒரு தனி நபருக்கோ வழங்கப்பட முடியும். இவ்வாறு பொறுப்பளிக்கப்படுபவர் “அல்-முதவல்லி” என அழைக்கப்படுகின்றார் (Mohd Afendi Mat Rani & Asmah Abdul Aziz, 2010). இவர் வக்ஃபாக வழங்கப்படும் நபரின் விருப்பினை நிறைவேற்றுதல், வக்ஃபாக வழங்கப்பட்ட சொத்துக்களை முகாமை செய்தல், அதிலிருந்து வருமானத்தைப் பெற்று பயனாளிகளிடம் அதனை ஒப்படைத்தல் போன்ற பணிகளை ஆற்றுகின்றார்.

இவ்வாறு ஒரு நபர் வக்ஃபாக வழங்கும் போது குறித்த சொத்துக்குரிய முதவல்லிகள் சரியாக நிருவகிக்கத் தவறுகின்ற சமயத்தில் மாத்திரம் முஸ்லிம் சமூகத்தின் நீதிபதி

அதற்குத் தகுதியான நபர்களை பொறுப்பாக்குவார். தகுதியான நபர்களை தேர்வு செய்யும் வரை குறித்த சொத்துக்களுக்கு காழி நீதிபதியே முதவல்லியாக செயற்படுவார். இதனையே ஷாபிஈ மற்றும் மாலிக் மத்ஹப் அறிஞர்களின் வழிகாட்டுதலுமாகும் (Mohd Afendi Mat Rani, 2010). பல நாடுகளில் இந்நடைமுறை காணப்படுகின்றது. இலங்கையைப் பொருத்தமட்டில் அதன் நடைமுறை சற்று வேறுபட்டது.

இலங்கையில் வக்ஃப் சொத்துக்களை முகாமை செய்வதற்குப் பொறுப்பாக நம்பிக்கையாளர்கள் (Trustees) நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களே முதவல்லியுடைய நிலையிலிருந்து செயற்படுவர், இதனை சட்டம் அங்கீகரிக்கின்றது. இந்நம்பிக்கையாளர்களை மேற்பார்வை செய்யும், கேள்விகேட்கும் அதிகாரம் வக்ஃப் சபைக்கும், முஸ்லிம் கலாசார அமைச்சின் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மாற்றமாக இலங்கையில் காழி நீதிபதிகள் தலையீடு இடம்பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையைப் பொருத்தமட்டில் தெளிவாக அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ள போதிலும் காழி நீதிபதிகள் தங்கள் அதிகார வரம்புகளை மீறி செயற்படுவது வக்ஃப் சபையின், நம்பிக்கையாளர்களின் செயற்பாட்டிற்கு தடையாக அமைந்துள்ளது.

**2.10. வக்ஃப் சட்டத்தில் நம்பிக்கையாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தகைமைகள் தெளிவாக குறிப்பிடப்படாமை**

இலங்கை வக்ஃப் சட்டம் நம்பிகையாளர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும் என மாத்திரம் குறிப்பிட்டுள்ளதே தவிர அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்க்கான தகைமைகள் தொடர்பில் குறிப்பிடத் தவறியுள்ளது. இதனால் சமூகநலச் சிந்தனையுடைய, அறிவுஞானமுடைவர்கள் பின்தள்ளப்பட்டு பணபலமும், அரசியல் செல்வாக்குமிக்க நபர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர் அல்லது பரம்பரை ஆட்சியாக ஒரே குடும்பத்தவர்கள் பதவிவகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை மாற்றியமைக்க வேண்டுமெனின் அதிகுறைந்த தகைமைகளைச் சட்டம் உள்வாங்க வேண்டும்.

**2.11. வக்ஃப் சபைக்கு நம்பிக்கையாளர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் வழங்கப்படாமை**

தர்ம நம்பிக்கையாளர் பதவிக்கு நம்பிக்கையாளர்கள் இரு முறைகளில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

1. தெரிவு முறை
2. தேர்தல் முறை

இவற்றில் தெரிவு முறை என்பது ஜமாஅத் அங்கத்தவர்கள் பெயர்பட்டியலில் உள்ள அங்கத்தவர்களில் இருந்து 8-11 இடைப்பட்ட எண்ணிக்கையான அங்கத்தவர்கள் பிரேரித்தல் மற்றும் ஆமோதித்தல் முறை மூலம் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் தங்களுக்குள் தலைவர், செயலாளர் மற்றும் ஏனைய பதவிகளுக்கு பொருத்தமான நபர்களை நியமிப்பார். இச்செயற்பாடுகள் அனைத்தும் சென்ற நம்பிக்கையாளர் சபையின் தலைவர் பொறுப்பதிகாரியாக நின்று செயற்படுத்துவார். இதனை மேற்பார்வை செய்யவென வக்ஃப் சபையின் பிரதிநிதியாக பிரதேச சபையின் கலாசார அதிகாரி கலந்து கொள்வார்.

இரண்டாவது முறையான தேர்தல் முறை மூலம் தெரிவு செய்யப்படுவது. இது நேரடியாக ஜமாஅத் அங்கத்தவர்களில் இருந்து ஜமாஅத் அங்கத்தவர்களால் தெரிவு முறையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்படும் போதே இதன் தலைவர், செயலாளர் பதவிகளுக்கு பொருத்தமான நபர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இவ்விரு முறைகளிலும் தெரிவு செய்யப்படும் நம்பிக்கையாளர்கள் தொடர்பில் புதிய அங்கத்தவர்கள் பெயர்பட்டியல் தயாரிக்கப்பட்டு இலங்கை வக்ஃப் சபைக்கு அனுப்பிவைக்கப்படும். இதனை வக்ஃப் சபை உறுதிப்படுத்தும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் வக்ஃப் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய அம்சம் நம்பிக்கையாளர்களின் தெரிவு முறையிலோ அல்லது நியமனத்திலோ வக்ஃப் சபை நேரடியாக தலையீடு செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. மேலும், நம்பிக்கையாளர் தெரிவில் குறித்த பள்ளிவாயில் வழக்காற்று அடிப்படையில் ஏதேனும் நடைமுறைகள் பின்பற்றப்படின் அதில் மேற்குறிப்பிட்ட இரு


ISBN 978-624-5736-14-0

முறைகளின் அடிப்படையில் தெரிவு செய்யும் படி பணிக்கும் அதிகாரம் வக்.ஃ.ப் சபைக்கு கிடையாது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### 2.12. வக்.ஃ.ப் மன்றிற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை.

வக்.ஃ.ப் நியாய சபைக்கு அல்லது வக்.ஃ.ப் மன்றிற்கு ஆரம்ப மற்றும் மேன்முறையீடு ஆகிய இரு வகையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்ப நீதி அதிகாரத்தில் ஏதேனும் ஒரு நம்பிக்கையாளரின் பணியில் அல்லது செயற்பாட்டிற்கு எதிராக ஐந்து அங்கத்தவர்கள் இணைந்து ஒப்பமிட்டு விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்களை விசாரணை செய்யும் அதிகாரத்தை பெற்றுள்ளது.

மேன்முறையீட்டு அதிகாரத்தில் பின்வரும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. வக்.ஃ.ப் சபையின் தீர்ப்புக்கு எதிராக முப்பது நாட்களுக்குள் மேன்முறையீடு மேற்கொள்ளும் அதிகாரம் (பிரிவு 9H(1))
2. முப்பது நாட்கடந்து விண்ணப்பிக்கப்படும் மேன்முறையீடுகளை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் குடியியல் சட்டக்கோவையின் ஒழுங்குகளைப் பின்பற்றி தகுந்த காரணங்கள் உள்ளபோது குறித்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் வழங்கபப்பட்டுள்ளது (விதிமுறை 30 (1)).
3. குறித்த மனுவில் காரணங்கள் சுருக்கமாக குறிப்பிடப்படுவதுடன் மனுவில் குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகளுக்கு அனுப்புவதற்குத் தேவையான பிரதிகளை பெற்றுக் கொள்ளும் அதிகாரம் விதிமுறை 32 இல் வழங்கப்பட்டுள்ளது.
4. விசாரணைக்கான வக்.ஃ.ப் சபையிடம் சம்பந்தப்பட்ட விபரங்களைக் பெற்றுக் கொள்ளும், விசாரணைக்கான திகதி குறிப்பிடப்பட்டு அழைப்பானை விடுக்கும் அதிகாரம் விதிமுறை 34இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களையே குறித்த நியாயசபை பெற்றுள்ளது. இதற்கு மேலதிகமாக விசாரணையின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தும், சொத்துக்களை பெற்றுக் கொள்ளும், தண்டப்பணம் அறவிடும் அதிகாரங்கள் போன்றன மாவட்ட நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்றதே தவிர குறித்த சபையால் நேரடியாக மேற்கொள்ளப்படுவதில்லை. இதனால் இச்சபை தனது அதிகார வரம்புகளை மீறிச் செயற்பட முடியாது மட்டுப்படுத்தப்படுகின்றமை இதன் செயற்பாட்டிற்கு தடையாக அமைகின்றது. மேலும் ஒரு சமயம் தொடர்பான விடயத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்து பொது நீதிமன்றங்களில் தங்கி நிற்கின்ற நிலை காணப்படுகின்றது.

### 2.13. நவீன வக்.ஃ.ப் நிறுவன நடைமுறைகளை பின்பற்றாது பாரம்பரிய நடைமுறைகளையே பின்பற்றுகின்றமை

இலங்கை வக்.ஃ.ப் சட்டம் 1956ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982ஆம் ஆண்டு இறுதியாக மாற்றத்திற்கு உட்பட்டு இன்றுவரை தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சட்டம் பழமையான வக்.ஃ.ப் நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்துவதுடன் நவீன வக்.ஃ.ப் முறைகளையும், செயற்பாடுகளையும் கைக்கொள்ளத் தவறியுள்ளது. காலத்துக்கு ஏற்ப வக்.ஃ.ப் சட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு புதிய வக்.ஃ.ப் நடைமுறைத் திட்டங்கள் இவற்றில் உள்வாங்கப்படுவதுடன் தனது நிறுவனச் செயற்பாடுகளை விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

### 2.14. ஸகாத் நிதியங்கள் முறையாக முகாமை செய்யப்படாமை

இலங்கையில் ஸகாத் அமைப்புக்கள் செயலிழந்து காணப்படுகின்றன. இதனால் வருடாந்தம் ஸகாத் திரட்டல், ஏழை எளியவர்களிடம் ஒப்படைத்தல் போன்ற செயற்பாடுகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளமை சமூகத்தில் வறியவர்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது. மேலும் ஸகாத் நடைமுறைக்கென தனியான சட்டவிதிமுறைகளை குறித்த சட்டம் உள்வாங்கத் தவறியுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இதற்கு மாற்றமாக நைஜீரியா மற்றும் குவைத்தில் உள்ள வக்.ஃ.ப் நிறுவனங்களினால் ஸகாத் நிறுவனங்கள் முறையான சட்டத்தின் அடிப்படையில் நிர்வகிக்கப்படுகின்றன. 1982/1403AH ஆண்டின் 5ஆம் இலக்கச் ஸகாத் சட்டம் உருவாக்கப்பட்டதுடன் (Amiri Ordinance no.5 of 1982) இது குவைத்


ISBN 978-624-5736-14-0

ஸகாத் ஹவூஸ் (Kuwaiti Zakah House) என்னும் முகவர் அமைப்பை ஏற்படுத்தி சிறப்பாக இயங்கி வருகின்றது (Mahadi Ahmad, 2015). மேலும் 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்கச் சட்டம் உருவாக்கப்பட்டது (Amiri Ordinance of the zakah law no. 46 of 2006). இது நேரடியாக பொருளாதார அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றது.

### 3. முன்னோக்கி செல்லும் வழி (Way forward)

இப்பகுதியில் இலங்கை வக்.்.ப் நடைமுறையை முன்னோக்கி நகர்த்துவதற்கு பொருத்தமான ஆலாசனைகளும் செயற்திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**3.1.** வக்.்.ப் பற்றிய மத்ஹபுடைய இமாம்களின் வரைவலக்கணங்களைத் தழுவியதாக வரையறைகள் வழங்கப்படல். இதன் போது குறிப்பாக ஷாபி மற்றும் ஹனபி அறிஞர்களின் வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் முதன்மை இடம் வழங்கல்.

**3.2.** வக்.்.ப் நியாயசபைக்கு நாட்டின் ஏனைய நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போன்று தீர்பை திருத்தியமைக்கும் அதிகாரம் வழங்கப்படல்.

**3.3.** வக்.்.ப் நியாய சபைக்கு மாவட்ட நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போன்று தீர்ப்புக்களை தன்னிச்சையாக செயற்படுத்துவதற்கு அதிகாரங்கள் வழங்கப்படல்.

**3.4.** வக்.்.ப் செயற்பாடுகளில் வெறுமனே மார்க்கப் பணிகளுக்கான மாத்திரம் செலவிடப்படாது பொது நலப்பணிகளுக்காகவும் செலவிடப்படுதல் வேண்டும். இது தொடர்பில் பொதுமக்களுக்கு வழிப்புணர்வை வழங்கல்.

**3.5.** முதவல்லிகளில் தெரிவு முறையில் அடிப்படைத் தகைமைகளாக கல்வித் தகைமைகள், மார்க்க அறிவு போன்றனவும் முதன்மைப்படுத்தப்படல்.

**3.6.** நம்பிக்கையாளர்களின் பதவிக்காலம் முடிந்த பின் உடனடியாக காலம் தாழ்த்தாது வக்.்.ப் சபை பொறுப்பதிகாரியாக நின்று அடுத்த நம்பிக்கையாளர் சபையைத் தெரிவு செய்தல்

**3.7.** வக்.்.ப் சொத்துக்கள் முறையாக பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பில் வா.்.கிபின் வாரிசுகள் விழிப்புடன் செயற்படுவதுடன் குறித்த சொத்துக்கள் முறையாக பயன்படுத்தப்படாத சமயத்தில் அச்சொத்துக்னை மீளப் பெற்று அதனை வேறு வழிகளில் செலவிடுதல்.

**3.8.** ''வக்.்.ப்ணமார்'' என்னும் எழுத்து மூலமான ஆவணம் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையிலும், வக்.்.ப் சபையிலும் இவ்விரு மட்டங்களில் முறையாக பேணப்படல்.

**3.9.** வக்.்.ப் சொத்துக்களின் விடயத்தில் காழி நீதிபதிகளின் தலையீடுகள் மட்டுப்படுத்தப்படல்.

**3.10.** நம்பிக்கையாளர் தெரிவில் பின்பற்றப்பட்டுவரும் வழக்காற்றுத் தெரிவு முறைகளை இல்லாதொழித்து, முழு இலங்கையிலும் ஒரே முறையைப் பயன்படுத்தி நம்பிக்கையாளர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் வக்.்.ப் சபைக்கு வழங்குதல்.

**3.11.** வக்.்.ப் மன்றிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அதிகரிக்கப்படல் வேண்டும் குறிப்பாக பிரிவு 30, 32 மற்றும் 34 போன்றவற்றில்.

**3.12.** காலத்திற்கு ஏற்ப நவீன நடைமுறைகளை உள்வாங்கும் வகையில் விசேட ஆய்வுக்குழு ஏற்படுத்தப்பட்டு, அதன் ஆய்வு முடிவுகளை வக்.்.ப் சபை நடைமுறைப்படுத்தல்.

**3.13.** ஸகாத் நிதியங்களுக்கு என தனியான சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டு, அவை முகாமை செய்யப்படல் வேண்டும். மேலும், இதன் செயற்பாடு தொடர்பில் வக்.்.ப் சபை விழிப்புடன் செயற்படல்.

**3.14.** பொது நிறுவனங்களுக்கு வக்.்.ப் செய்யப்படுகின்ற போது வாரிசுதாரர்கள் குறித்த சொத்துக்கு தனி முதவல்லியாக நியமிக்கப்படல்.

### முடிவுரை (Conclusion)

இலங்கையில் வக்.்.ப் செயன்முறை நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஒரு முறையாகும். இது காலனித்துவ காலப்பகுதியில் (1956) நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒரு முறையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இது வரலாற்று நெடுகிலும் பல விமர்சனங்களுக்கும், கருத்தாடல்களுக்கும் உடப்படுத்தப்பட்டு வந்தமையால் வரலாற்றில் இரு தடவைகள் சட்ட மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது (1962, 1982). இஸ்லாத்தின் பொருளாதாரக்


ISBN 978-624-5736-14-0

கோட்பாடுகளுள் மிக முக்கியமான ஒன்றான வக்ஃப், நிருவாகரீதியில் பலமான ஒரு கட்டமைப்பைக் கொண்டு செயற்படுகின்ற போதிலும் இதன் முகாமைத்துவ மட்டங்களிலும், சட்டத்திலும் உள்ள குறைபாடுகள் இதன் வினைத்திறனான செயற்பாட்டுக்கு தடையாக அமைந்துள்ளமை ஆய்வின் முடிவாகக் கொள்ள முடியும். இதனால் பாரிய சொத்துக்கள் உரிய முறையில் பயன்படாது கைவிடப்படுகின்றமையால் சமூகத்தில் வறுமை, வேலையில்லாப் பிரச்சினை, சமூகநல தன்னார்வ இயக்கங்கள் பணிகளை நிறுத்திக் கொள்ளும் நிலை போன்றவற்றிக்கு இது வழியமைத்துள்ளது. ஒரு நாட்டை பொருளாதார தன்னிறைவுள்ளதாக மாற்றும் சக்தி வக்ஃப் நிறுவனச் செயன்முறைக்கு உள்ளது. இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சட்டம் சார்ந்த குறைபாடுகள், முகாமைத்துவ குறைபாடுகள் மற்றும் நடைமுறை சவால்கள் என்பன நீக்கப்படும் பட்சத்தில் இலங்கை பொருளாதார ரீதியில் வளம்பெற இக்கோட்பாடு துணைநிற்கும் என்பதில் சந்தேகமில்லை. இது தொடர்பில் கொள்கை வகுப்பாளர்களும், ஆட்சியாளர்களும் அக்கறையுடன் செயற்படுவது அவசியமாகும்.

**உசாத்துணைகள்**


Abduroaf, Muneer; Moosa, Najma (2016). Muslim Marriage and Divorce in Sri Lanka. Aspects of the relevant jurisprudence. *Electronic Journal of Islamic and Middle Eastern Law (EJIMEL)*, 4:97-108

Aashiq, A. (2019). The Wakf System in Islam and its Application in Sri Lanka. *Faculty of Islamic Studies and Arabic Language- FIA 6th International Symposium 2019* (pp. 292-307). Oluvil, Sri Lanka: South Eastern University of Sri Lanka .

Abdullahi A. An-Na'im. (2020, May 22). *www.scholarblogs.emory.edu*. Retrieved from Islamic family Law: Sri Lanka, Democratic Socialist Republic of Sri Lanka : https://scholarblogs.emory.edu/islamic-family-law/home/research/legal-profiles/sri-lanka-democratic-socialist-republic-of/

Ameen.AGH. (2006). *Waqf Act and it application.* Colombo: Al-Ameen Publisher.

Cooray, L. J. (2003). *An introduction to the legal system of Sri Lanka.* Colombo: Lake House Investments; 2nd edition.

Department of Muslim Religious and Cultural Affairs. (2014). *Annual Report.* Colombo- Sri Lanka: Department of Muslim Religious and Cultural Affairs.

Faliq Asraf Jafria, Azman Mohd Noora. (2019). Temporary Waqf Model for Islamic Private Retirement Scheme in Malaysia - A Proposal. *Journal of Islamic Finance: IIUM Institute of Islamic Banking and Finance*, 2289-2117.

Fathima Azmiah Bary. (2003). The Legal System of Sri Lanka. *国際経営論集, 26:* , 165-180.

Mahadi Ahmad, Syed Khalid Rashid, Uzaima Ibrahim & Umar A. Oseni. (2015). The Legal and regulatory framework for Zakah and Waqf administration in Kuwait: lessons for Nigerian Zakah and Waqf Institutions. *International Journal of Business, Economics and Law*, 9-19.

Md Golzare Nab, Md. Aminul Islam, Rosni Bakar & Mohammad Masuduzzaman. (2019). Waqf as a Viable Tool for Sustainable Economic Development in Bangladesh. *Thoughts on Economics*, 68-84.

Mohd Afendi Mat Rani & Asmah Abdul Aziz. (2010). Waqf management and administration in malaysia: its implementation from theperspective of islamic law. *Malaysian Accounting Review*, 115-121.

Mohmed Al amine Sano and Salina Kassim. (2020). Waqf governance in the republic of guinea: Legal framework, issues, challenges and way forward. *International Journal of Islamic Finance Emerald Publishing Limited* , 0128-1976.

Muhamed Thaheer Fathima Bushra. (2021 ). *Management of Waqf properties: a study based on sri lanka context.* Oluvil: Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern Univerity of Sri Lanka (SEUSL).

Muhammed Buhary Muhammed Thabith. (2019). Legal Framework of Waqf in Sri Lanka: An Analytical Study. *Faculty of Islamic Studies and Arabic Language- FIA 6th International Symposium 2019* (pp. 308-314). Oluvil, Sri Lanka: South Eastern University of Sri Lanka .

Tabasum Rasool . (2017). Waqf Administration in India: Issues and Challenges of State Waqf Boards. *Department of Poltical Science. Aligarah Muslim University, Aligarah, India.*, 106-119.

Unity is Strength. (2016, October 25). *வக்பு வாரிய சொத்துக்கள் கொள்ளை.* Retrieved from www.knrunity.com: https://knrunity.com/post/news/2016/post-1192.php

Zarook. I, (2018), *The law relating to mosques & muslim charitable trusts or waqf.* published by Ibrahimsahib Zarook.


ISBN 978-624-5736-14-0